செ.வெ.எண்: 25 நாள்: 12.07.2016

# பத்திரிகை செய்தி

## இந்திய இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முகாம் சீதக்காதி சேதுபதி ஸ்டேடியம், இராமரநாதபுரத்தில் நடைபெறவுள்ளது.

திருச்சிராப்பள்ளி இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகத்தின் மூலம் சீதக்காதி சேதுபதி ஸ்டேடியம் இராமநாதபுரத்தில் இந்திய இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முகாம் 02-08-2016 முதல் 10-08-2016 வரை கீழ்க்காணும் பதவிகளுக்கு நடைபெறவுள்ளது.

சிப்பாய் டெக்னிக்கல் பணிக்கு 17 ½ வயது முதல் 23 வயது வரை உள்ள பனிரெண்டாம் வகுப்பில் இயற்பியல் , வேதியியல், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பயின்று சராசரியாக 45% தேர்ச்சியுடன் இருக்க வேண்டும் அல்லது 10-ல் பாஸ் மற்றும் AICTE அங்கீகரிக்கப்பட்ட 3 வருட பட்டய படிப்பல் 50 % தேறியிருக்க வேண்டும்.

நர்சிங் உதவியாளர் மற்றும் நர்சிங் உதவியாளர் வெட்னரி பணிக்கு 17 ½ வயது முதல் 23 வயது வரை உள்ள பனிரெண்டாம் வகுப்பில் இயற்பியல் , வேதியியல், மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பயின்று சராசரியாக 50% தேர்ச்சியுடன் 40% மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்திலும் இருக்க வேண்டும் அல்லது பி.எஸ்சி ல் தாவரவியல் , விலங்கியல் , உயரி அறிவியல் மற்றும் ஆங்கிலம் தேறியிருக்க வேண்டும்.

சிப்பாய் பொதுப்பணிக்கு 17 ½ வயது முதல் 21 வயது வரை உள்ள பத்தாம் வகுப்பில் 45% மதிப்பெண்களுடன் தேறியிருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் 33% மதிப்பெண்கள் பெற்று இருக்க வேண்டும் .

சிப்பாய் கிளார்க் , ஸ்டோர் கீப்பர் டெக்கினக்கல் பணிக்கு 17 ½ வயது முதல் 23 வயது வரை உள்ள பனிரெண்டாம் வகுப்பில் ஒவ்வொரு பாடத்திலும் 40 % மதிப்பெண்களும் கூட்டுத்தொகையாக 50% பெற்றிருக்க வேண்டும்.

சிப்பாய் பொதுப்பணி டிரேட்ஸ்மென் பணிக்கு 17 ½ வயது முதல் 23 வயது வரை உள்ள எட்டாம் வகுப்பில் தேர்ச்சீ பெற்றிருக்க வேண்டும். 10 –ம் வகுப்பு தேர்வு எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதள முகவரியில் 18-06-2016 முதல் 17-07-2016 வரை விண்ணப்பிக்கலாம். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு இராணுவ ஆட்சேர்ப்பில் கலந்துகொண்டு பயனடையுமாறும் மேற்கொண்டு தேவைப்படும் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை ( தொலைபேசி எண். 04322-221593), (திருச்சிராப்பள்ளி ஆட்சேர்ப்பு அலுவலக தொலைபேசி எண். 0431-2412254) அலுவலக வேலைநாட்களில் நேரில் அணுகுமாறும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**